செ.வெ.எண்-08 நாள்-05.08.2021

# அரியலூர் மாவட்டம்

# உலக தாய்ப்பால் வார விழாவினை முன்னிட்டு, விழிப்புணர்வு பிரச்சார வாகனத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பெ.ரமண சரஸ்வதி, இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை - ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் சார்பில் உலக தாய்ப்பால் வார விழாவினை முன்னிட்டு, விழிப்புணர்வு பிரச்சார வாகனத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.பெ.ரமண சரஸ்வதி, இ.ஆ.ப.,** அவர்கள் இன்று (05.08.2021) துவக்கி வைத்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் **திரு.கு.சின்னப்பா** அவர்கள் மற்றும் ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் **திரு.க.சொ.க.கண்ணன்** அவர்கள் முன்னிலை வகித்தனர்.

**இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது,**

ஒவ்வொரு வருடமும் உலக தாய்ப்பால் வார விழா ஆகஸ்ட் மாதம் 1 ஆம் தேதி முதல் 7 ஆம் தேதி வரை கொண்டாடப்பட்டுவருகிறது. பிறந்த குழந்தைகளின் ஆரோக்கிய வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் தேவையான ஊட்டச்சத்துக்கள் தாய்ப்பாலில் மட்டுமே அமைந்துள்ளது.

தாய்ப்பால் கொடுப்பதால் தாயின் உடல் நலத்திற்கு மிகவும் நல்லது. குழந்தை பிறந்தவுடன் ஒருமணி நேரத்திற்குள் தாய்ப்பால் அளிக்க வேண்டும். குழந்தை பிறந்தவுடன் முதலில் சுரக்கும் சீம்பாலை கட்டாயம் குழந்தைக்கு தர வேண்டும். இதுவே குழந்யின் முதல் உணவாகும். சீம்பால் கொடுப்பதால் கண்பார்வைக்கு தேவையான உயிர்ச்சத்து ஏ உள்ளது. ஆறுமாதம் வரை நோய் எதிர்ப்புச்சக்தி உள்ளது. குழந்தைக்கு ஆறு மாதம் வரை தொடர்ந்து தாய்ப்பால் மட்டுமே அளிக்க வேண்டும். தண்ணீர் கூட கொடுக்க தேவையில்லை. தாய்ப்பால் மட்டும் அளிப்பதால் குழந்தையின் அறிவு திறன் வளர்ச்சி நன்கு மேம்படும். ஆறு மாதம் முடிந்தவுடன் துணை உணவுடன் இரண்டு வயது வரை தாய்ப்பால் வழங்க வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.பெ.ரமண சரஸ்வதி, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்தார்கள்.

அதனைத்தொடர்ந்து, தாய்ப்பால் அவசியம் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் அங்கன்வாடி பணியாளர்கள் உலக தாய்ப்பால் வார விழா உறுதிமொழி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் ஏற்றுக்கொண்டனர். மேலும், மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், தாய்ப்பால் அவசியம் குறித்து மருத்துவ அலுவலர் மூலம் கர்ப்பிணித்தாய்மார்களுக்கு கருத்துரை வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஊராட்சிக்குழுத்தலைவர் பொ.சந்திரசேகர், திட்ட அலுவலர் (ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப்பணிகள்) நா.சாவித்ரி, ஒன்றியக்குழுத்தலைவர் செந்தமிழ்செல்வி, குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர் க.அன்பரசி, வட்டார மருத்துவ அலுவலர் ரேவதி மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**